www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் Christianity | Three Hours / Gr -12 (2023) | 43 | T | I,II |

### பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்து தரப்பட்ட புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.**

01. பிபிலியா என்பதன் பொருள்
1) நூலகம் 2) நூல்களின் தாய் 3) பாடசாலைத் தாய்
4) தாய் நாடு 5) இறைவார்த்தை

02. இறை ஏவுதல் என்பதற்கான கிரேக்கசொல்
1) அபோகளிப்ஸ் 2) ஷமார் 3) அதமாவர்
4) தியோப்னெட்டோஸ் 5) அசேரா

03. பலஸ்தீனா நாட்டிற்கு முதுகெலும்பு போல் அமைந்துள்ள மலைத் தொடர்
1) மேற்குத் மலைத்தொடர்
2) கிழக்கு மலைத் தொடர்
3) வடக்கு மலைத்தொடர்
4) தெற்கு மலைத்தொடர்
5) லெபனான் மலைத்தொடர்

04. இறைவனுக்குரிய விழுமியங்களை தமதாக்கிக் கொள்ள முயற்சி செய்தவர்கள்
1) காயீன் - ஆபேல் 2) ஆபிரகாம் - சாராள் 3) ஈசாக் - ரெபேக்கா
4) யாக்கோபு – ராகேல் 5) ஆதாம் - ஏவாள்

05. திருவிவிலியத்தின் நோக்கம் ஒழுக்கமும் நற்பயிற்சியும் கொண்ட கிறிஸ்தவர்களை உருவாக்குவதே எனக் கூறியவர்.
1) புனித ஜஸ்டின் 2) புனித ஜெரோம் 3) புனித அகுஸ்தினார்
4) புனித பவுல் 5) புனித அம்புறோஸ்

06. இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மக்கள் என்பதை அடையாளப்படுத்தும் சடங்கு
1) விருத்த சேதனம் 2) தலைமகன் அர்ப்பணம் 3) நசரேய அர்ப்பணம்
4) பெயர் சூட்டுதல் 5) திருமுழுக்கு

07. யாக்கோபு பெற்ற விசேட தூய ஆவியின் வல்லமையை எடுத்துக் காட்டும் நிகழ்வாக அமைவது யாக்கோபு -
1) விந்தை மிகு கனவு கண்டார்.
2) சகோதரரான ஏசாவுடன் ஒற்றுமையாகுதல்.
3) இறை தூதர் ஒருவருடன் மற்போரிட்டார்.
4) செல்வங்களினால் நிரம்பியிருந்தார்.
5) எதிர்காலம் தொடர்பாக திட்டமிடுதல்.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08. ஆரம்ப காலத்தில் விவசாயிகள் தம் செழிப்பான விளைச்சலுக்காக இறைவனுக்கு நன்றி கூறிய விழா
    1) பாஸ்கா விழா　2) கூடார விழா　3) பாவப்பரிகாரத்திருவிழா
    4) கோவில் அர்ப்பணத் திருவிழா　5) புளியாத அப்பத் திருவிழா

09. மாரா என்னுமிடத்தில் தண்ணீர் இருந்தாலும் இஸ்ரயேல் மக்களால் பருக முடியவில்லை. இங்கு மாரா என்ற எபிரேயச் சொல்லின் பொருள் ?
    1) இனிப்பு　2) சேறு　3) கழிவு நீர்
    4) கசப்பு　5) கொதிநீர்

10. மேய்ப்பர்களாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்களை இறைவனின் சொத்தாகவும் இறைமக்களாகவும் மாற்றியமைத்தது.
    1) திருமண உடன்படிக்கை　2) சீனாய் உடன்படிக்கை
    3) சமாதான உடன்படிக்கை　4) அர்ப்பணிப்பு வாழ்வு
    5) விழாக்கள்

11. இருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்.... என மெசியாவின் பிறப்பைப் பற்றிக் கூறிய இறைவாக்கினர்.
    1) மீக்கா　2) மலாக்கி　3) எசாயா
    4) எசேக்கியேல்　5) எரேமியா

12. சமூக நீதியின் இறைவாக்கினர் என அழைக்கப்படுபவர்.
    1) எசாயா　2) எரேமியா　3) மீக்கா
    4) எசேக்கியேல்　5) ஆமோஸ்

13. செபத்தின் புதையல் என அழைக்கப்படுவது.
    1) நீதிமொழிகள்　2) இனிமை மிகுபாடல்கள்　3) திருப்பாடல்கள்
    4) சாலமோனின் ஞானம்　5) சீராக்கின் ஞானம்

14. யூத சமய மக்கள் குழுவினருக்கிடையில் மிக மதிப்புடன் கவனிக்கப்பட்ட அதிகாரம் நிறைந்த குழுவினர்.
    1) சதுசேயர்　2) எஸ்சேனியர்　3) செலஸ்தியர்
    4) பரிசேயர்　5) மக்கபேயர்

15. இயேசு கற்பிக்கும் பணிக்கு முதலிடத்தை வழங்குகின்ற உண்மையான அதிகாரமுள்ள ஆசிரியரென வெளிப்படுத்தும் நற்செய்தி நூல்
    1) மத்தேயு　2) மாற்கு　3) லூக்கா
    4) யோவான்　5) எபிரேயர்

16. யூத, யூதரல்லாத அங்கத்தவர்களையுடைய கலப்புச் சபையில் பணியாற்றுவதற்கு பவுலுக்கு கதவுகள் திறக்கப்பட்டன. அச் சபையானது.
    1) எபேசு　2) பாப்போ　3) பிசிதியாவின் அந்தியோகியா
    4) சிரியாவின் அந்தியோகியா　5) கொரிந்து



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

17. "உங்களுடைய அழிவிற்கு நீங்களே பொறுப்பு நான் செல்கிறேன்" என பவுல் தனது மேலுடையிலிருந்த தூசியை உதறிவிட்டு சென்ற இடம்.
   1) கொரிந்து 2) பிலிப்பு 3) துரோவா
   4) மிலேத்து 5) பெருகை

18. இறையாட்சிக்குள் நுழைவதற்கு விரும்புவோர் உலகில் செயற்பட வேண்டிய முறையை எடுத்துக்காட்டும் உருவகங்கள்
   1) முத்து, உப்பு 2) கடுகு, உப்பு 3) உப்பு, ஒளி
   4) வெளிச்சம், இருள் 5) விதைகள், இருள்

19. திருமறையைப் போதிக்கின்ற சபைத் தலைவர்களின் பொறுப்பு பற்றி குறிப்பிடுகின்ற உவமை
   1) பத்து தோழியர் 2) நம்பிக்கைக்குரிய பணியாளர் 3) அத்தி மரம்
   4) தாலந்து உவமை 5) இரு பெண்கள்

20. தூய பவுல் அன்பு என்பதற்குப் பயன்படுத்தும் 'அகபே' என்னும் சொல்லின் மூலம் வெளிப்படுவது.
   1) உடலை எரிபலியாக ஒப்புக்கொடுத்தல்.
   2) தியாகம் செய்தல்.
   3) ஆன்மீக ஆற்றல்களினால் நிறைந்திருத்தல்.
   4) பிறர் நலப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுதல்.
   5) பிரதிபலனை எதிர்பாராது பிறர் தீமை செய்தாலும் நன்மையையே விரும்புகின்ற பண்பு

(20x1 = 20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி (I) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (II) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி I

01. 1) ஆயத்துவ இறை ஏவுதலைப் பெற்றுக் கொண்ட தலைவர்கள் இருவரைத் தருக. (2 புள்ளிகள்)
   2) நீதித் தலைவர்களின் கடமைகள் இரண்டினை எழுதுக. (4 புள்ளிகள்)
   3) இஸ்ரயேல் மக்கள் பலஸ்தீனாவில் குடியேறிய பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைத் தந்து விளக்குக. (6 புள்ளிகள்)
   4) இன்றைய கால கட்டத்தில் இறைவன் தம்மை வெளிப்படுத்தும் வழிகள் நான்கினை விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)

02. 1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்ட இரண்டு பாரம்பரியங்களை எழுதுக. (2 புள்ளிகள்)
   2) இறைவன் ஆபிரகாமை அழைத்த போது அவருக்கு கொடுத்த வாக்குறுதிகள் இரண்டினை எழுதுக. (4 புள்ளிகள்)
   3) மனிதன் இறைவனுக்கு எதிராக செய்த பாவத்தின் காரணமாக அவனுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியினை மூன்றினைத் தந்து விளக்குக. (6 புள்ளிகள்)
   4) இன்றைய இளைய சமூகத்தினர் இறைவனை விட்டு தூரமாய் விலகிச் செல்வதற்கான காரணங்கள் நான்கினை முன்வைத்து விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03\. 1) எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினருள் இருவரின் பெயரை எழுதுக. (2 புள்ளிகள்)

2) இறைவாக்கினர்களின் பிரதான படிப்பினைகளில் இரண்டினைத் தருக. (4 புள்ளிகள்)

3) எபிரேய ஞானத்தின் பிரிவுகள் மூன்றினை உதாரணத்துடன் எழுதுக. (6 புள்ளிகள்)

4) இஸ்ரயேல் மக்களை வழிநடத்திய இறைவாக்கினர்களின் பணிகள் இன்றைய திருச்சபைத் தலைவர்களுக்கு எவ்வாறு முன்னுதாரனமாய் விளங்குகின்றது என்பதை நான்கு விடயங்களை முன்வைத்து விளக்குக. (8 புள்ளிகள்)

(2+4+6+8 = 20 புள்ளிகள்)

## பகுதி II

04\. 1) ஐந்நூல் எழுதப்படுவதற்கு உதவிய பாரம்பரியங்களில் ஒன்றான குரு மரபின் இலக்கியப் பண்பினையும், கருப்பொருளூடாக வெளிக் கொணரும் மறையுண்மைகளையும் விளக்குக. (2 புள்ளிகள்)

2) 'இறை கட்டளைகளை கடைப்பிடித்து வாழுதல் கிறிஸ்தவனின் அடையாளம்' தூயாவியின் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவனாகிய நீர் எவ்வாறு சான்று பகர்வீர் என்பதை ஐந்து எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

05\. 1) சமநோக்கு நற்செய்தியின் ஆசிரியத்துவம், காலம், தகவல்கள் என்பன பற்றி முன்வைக்கபட்டுள்ள கருத்துக்கள் ஐந்தினை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

2) "அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" இன்றைய காலகட்டத்தில் நாடுகளுக்கிடையேயான அமைதியின்மைக்கான காரணங்களையும் அமைதியை ஏற்படுத்துவதில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பையும் ஆராய்க. (10 புள்ளிகள்)

06\. 1) தூய பவுல் அன்பின் செயற்பாடுகளைப் பற்றி எவ்வாறு எடுத்துரைக்கின்றார் என்பதனை ஆராய்க. (10 புள்ளிகள்)

2) தூய பவுலின் வாழ்க்கையிலிருந்து இன்றைய மறைபரப்பாளர்களுக்கு கிடைக்கும் வழிகாட்டல்கள் ஐந்தினை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

07\. 1) யூத சமூகத்தில் பெண்கள் தொடர்பான சமூக நிலைப்பாடு எத்தகைய தன்மையோடு காணப்பட்டது என்பதனையும் இயேசு அவர்கள் மட்டில் காட்டிய கரிசனையையும் ஐந்து எடுத்துக் காட்டுக்களுடன் ஆராய்க. (10 புள்ளிகள்)

2) இன்றைய காலகட்டத்தில் பெண்கள் எதிர் கொள்கின்ற சவால்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் ஆராய்க. (10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk